॥ श्रीः ॥

॥ श्रीरामचन्द्रपरब्रह्मणे नमः ॥

श्री शंकरभगवत्पादैर्विरचितं

# हनुमत्पञ्चरत्नम्

THE MADURA TAMIL SANGAM
933 D
ACL.FTS 00169
6933
6933 D
6933

ஸ்ரீ:

ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள் அருளிய

# ஹநுமத் பஞ்சரத்னம்

வே. நாராயணன். எம்.ஏ., எம்.எல்.,

தமிழில் எழுதிய விளக்கவுரையுடன்

பதிப்பாளர்:

கிரி ப்ரஸ்

லை ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை]

[விலை அணா 4

FIRST
EDITION
*Nov. '48*

*Printed & Published*
by K. Kylasamier
at GIRI PRESS,
Triplicane - Madras.

॥ श्रीः ॥

॥ श्रीरामचन्द्रपरब्रह्मणे नमः ॥

ஸ்ரீ:

ஸ்ரீராமச்சந்த்ர பரப்ரஹ்மணே நம:

# முன்னுரை

வேதங்களின் ஸாரமாய் அமைந்த "ஸ்ரீராம புஜங்க ப்ரயாத ஸ்தோத்திர"த்தாலே ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியை ஆனந்தமாய் பக்தி சிரத்தையுடன் முப்பொழுதும் துதித்து எப்பொழுதும் மனத்திலே அப்பிரானையே கொண்டு வாழ்கின்றவர்கள் அனைவரும் பெரும்பேறு பெற்று ஸ்ரீ ராமசந்திர பரப்பிரும்மத்தோடு இரண்டறக்கலந்து ஸ்ரீராமபிரானாகவே கொள்ளப்படுவார்கள் என்று நிர்ணயித்து, அப்படியே எவரும் ஸ்ரீராமரைச் சென்றடைவதற்கான ராஜமார்க்கத்தை அந்த ஸ்தோத்திரத்திலேயே சுட்டிக் காட்டுகிறார்கள்.

सदा राम रामेति रामामृतं ते
सदाराममानन्दनिष्यन्दकन्दम् ।
पिबन्तं नमन्तं सुदन्तं हसन्तं
हनुमन्तमन्तर्भजे तं नितान्तम् ॥

"ஸ்ரீராமபிரானே! உன்னுடைய திருநாமத்தை எப்பொழுதும் நாவினாலே நவிற்றும் இன்பத்தைப் பெற்று, நாவிலே அமுதூற, எப்பொழுதும் அந்த இன்பத்தேனையே

பருகித்திளைத்து, மேன்மேலும் உன் நாமாமிருதத்தையே பருகுவோராய் ஆனந்தமயமேயாகி உன்னையேஎப்பொழுதும் கண்ணாரக்கண்டு களித்தும், தலைவணங்கியும், ஒள்ளிய பல் வரிசை நன்ருகத் தெரியும்படி வாய்விட்டுச் சிரித்து உள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்தியும் என்னை ஆட்கொண்டருளிய ஹனுமந்த குருவை "நான் என் உள்ளக் கோயிலிலே வீற்றிருக்கச்செய்து இடையருது வழிபடுகிறேன்" என்று தெரிவிக்கிருர்கள். அப்படித் தாம் வழிபட்ட வழியை இந்த "ஹனுமத் பஞ்சரத்னம்" என்னும் ஸ்துதியைக் கொண்டு விளக்கி, உலகோரும் நம்மைப் பின்பற்றி ஸ்ரீராம பிரானுடைய திருவருளைப் பெறுவதற்கு வழியையும் காட்டுகிருர்கள்.

ஸர்வதாரி, தீபாவளி. **வே. நாராயணன்.**



|| श्रीः ||

|| हनुमत्पञ्चरत्नम् ||

ஸ்ரீ:

# ஹநுமத் பஞ்சரத்னம்

वीताखिलविषयेच्छं जातानन्दाश्रुपुलकमत्यच्छम् ।
सीतापतिदूताद्यं वातात्मजमद्य भावये हृद्यम् ॥ १ ॥

*வீதாகில விஷயேச்சம்*
*ஜாதானந்தாஶ்ரு புலகமத்யச்சம் ।*
*ஸீதாபதிதூதாத்யம்*
*வாதாத்மஜமத்ய பாவயே ஹ்ருத்யம் ॥ 1 ॥*

வீதாகில விஷயேச்சம் = ஐம்பொறிகளாலே நுகர் தற்குரிய இந்திரிய சுகங்களிலேயுள்ள இச்சைகளை எல்லாம் போக்கிகொண்டவரும் ஜாதானந்தாஶ்ருபுலகம் = எவ்வித இச்சையுமில்லாததாலே நிர்மலராய், ஆனந்த மயராய், ஆத்மாவிற்கு இயல்பாகவுள்ள பேரின்பத்திலே திளைத்து, அப்பேரின்ப மேலீட்டி ஞலே கண்களில் ஆனந்த பாஷ்பமும் சரீரத்தில் எங் கும் புளகமு முடையவரும் அத்யச்சம் = தூய்மை மிகுந்தவரும் ஸீதாபதிதூதாத்யம் = 'சீதாதேவிக்கு நாய கன்' என்று சிறப்புற்ற ஸ்ரீராமபிரானுல் "அந்த தேவி யிடம் தூது செல்வதற்குரிய பெருமை வாய்ந்தவர் இவரே" என்று முதன்மையாகத் தேர்ந்தெடுத்து முத்

திரை மோதிரத்தை அடையாளமாகக் கொடுக்கப் பெற்று, தூதர்களுள் உத்தமரென்று புகழ் பெற்ற வரும் ஹ்ருத்யம் = மனத்திலே இன்பம் விளைவிப்ப வரும் வாதாத்மஜம் = வாயுபகவான் தமக்கேற்ற பிள்ளை என்று கொண்டாடும்படியான பெருமை வாய்ந்தவருமான ஹனுமந்தரை அத்ய = இன்று பாவயே = மனத்துள் வைத்து வழிபடுகிறேன்.

நித்ய பிரும்மசாரியாய், இந்திரியங்களை அடக்கி யொடுக்கி, ஆசைகளை முழுதும் அகற்றி, நிர்மலமான மனத்தையும் அவயவங்களையும் உடையவராகி, கண் டோர் அனைவரும் "உம்முடைய சரீரமும் பிரும்ம மயமாகிவிட்டது" என்று தொழுது வலம் வரும்படி யாக, எப்பொழுதும் புளகமுற்ற அங்கங்களையும் ஆனந்த பாஷ்பம் நிறைந்து ததும்புகின்ற கண்களையு முடையவராகக் காட்சி யளிப்பவர் ஆஞ்சநேயப் பெருமான். 'அகலகில்லேன் இறையும்' என்று காட்டிற்குப் பின்தொடர்ந்து வந்த சீதாப்பிராட்டி யைப் பிரிய நேர்ந்தபோது, ஸ்ரீராமபிரானுடைய தூதராகச் சென்று, அலைகடலைத் தாவி, இலங்கை முழுதுந் தேடி, அசோகவனத்திலே பிராட்டியைக் கண்டு, ஸ்ரீராம சந்தேசத்தைக் கூறி, கணையாழியைக் காட்டித் தேற்றி, இலங்கை அழிவதற்கு வழிகோலிய பின், திரும்பிவந்து நற்செய்தி கூறி, சூடாமணியைக் காட்டிய செயல்களாலே, பிராட்டியோடு இராம பிரான் மீண்டும் சேர்ந்து "ஸீதாபதி" என்று புகழ் பெறுமாறு சேவகஞ் செய்த பெருமை இவருக்கே உரியது. "காற்றே, வா; அவளைத் தொட்டு வந்து என்னையும் தொடு; அதனால் அவளை மெய்தீண்டிய இன்பத்தை யுடையவனாவேன்" என்று ஸ்ரீராம னாலே பிரார்த்திக்கப் பெற்ற பெருமையையுடையவர் வாயுபகவான்; அவருக்கு ஏற்ற புத்திரன் என்பதை ஆஞ்சநேயர் இராமபிரானுக்குத் தேவியின் காத்திர ஸம்ஸ்பர்சம் கிடைக்கும்படி செய்து நிரூபித்தார்.

இவ்விருவர் மனமும் களிப்புற்றபோதே, நல்லோர் மனமெல்லாம் களிப்புறுவதாயிற்று. “இவ்வாறு, எல்லோருடைய மனத்திற்கும் இன்பம் விளைவிக்கும் ஆஞ்ஜநேய ஸ்வாமியை என்னுடைய மனத்திலுங் கொண்டு களிப்புறுகிறேன்” என்று ஆஞ்ஜநேய ஸ்வாமியின் அருமை பெருமைகளை நினைந்து, “அவரையே பரப்பிரும்ம ஸ்வரூபமாகக் கொண்டு கைதொழுது, இம்மையிலே எல்லாப் பேறுகளையும் பெற்று, அவரோடு ஒத்த ராமபக்தர்களாக விளங்குவீர்களாக” என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் உலகோர் அனைவர்க்கும் அனுக்கிரகஞ் செய்கிறார்கள்.

---

तरुणारुणमुखकमलं करुणारसपूरपूरितापाङ्गम् ।

संजीवनमाशासे मञ्जुलमहिमानमञ्जनाभाग्यम् ॥ २ ॥

*தருணாருண முககமலம்*

*கருணாரஸபூர பூரிதாபாங்கம் ।*

*ஸஞ்ஜீவனமாஶாஸே*

*மஞ்ஜுலமஹிமானமஞ்ஜனாபாக்யம் ॥ 2 ॥*

தருணாருணமுககமலம் = உதயமாகின்ற அருணனுடைய முகத்தைப்போலவே, அப்பொழுது அலர்ந்த செந்தாமரையையொத்த திருமுக மண்டலத்தை யுடையவரும் கருணாரஸபூரபூரிதாபாங்கம் = கருணையாகிய இன்பத்தேன் பெருகி நிரம்பி வழிகின்ற கடைக்கண்களையுடையவரும் மஞ்ஜுல மஹிமானம் = மனத்தைக் கவர்கின்ற நற்பெருமை வாய்ந்தவரும் அஞ்ஜனாபாக்யம் = “இவரைப்பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாளோ?” என்று கண்டோர் அனைவரும் வியப்புற்று, “அஞ்ஜனா தேவியின் நற்

பேறே இம்மூர்த்தியாக அவதரித்தது" என்னுமாறு அவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவரும் ஸஞ்ஜீவனம் = இராமபக்தியாகிய நன்னீரைப் பெறாது வாடி வதங்கி மாய்கின்ற உயிர்களுக்குத் திடபக்தியை ஊட்டி, அவைகளை உயிர்ப்பிக்கின்றவருமான ஆஞ்ஜநேய ஸ்வாமியை ஆஶாஸே = வாயார வாழ்த்துகிறேன்.

பேச இனியது ஆஞ்ஜநேயரது பெருமை. இவர் பிறந்த பொழுதே அஞ்ஜனாதேவி புகழ் பெற்றாள். சூரியபகவான் தோன்றுமுன், அவருடைய வரவிற்கு அடிகோலி, அருணபகவான் எவ்வாறு துஞ்சிய மக்களை எழுப்பித் தம்முடைய செவ்வி மாறாத திருமுக மண்டலத்தைக் காட்டி உயிர்பெற்றவர்களாகச் செய்கின்றாரோ, அவ்வாறே, ஆஞ்ஜநேய ஸ்வாமியும் செந்நிறமுடைய தம்முடைய இன்முகத்தைக் காட்டி, கருணை ததும்பிய திருக்கண்களாலே இனிது நோக்கி, சஞ்சீவி மலையைக் கொணர்ந்து இளைய பெருமாளை உயிர்ப்பித்தது போல, உயிரற்ற கட்டைகளைப் போற்கிடக்கும் மக்களுக்கு இராமபக்தியை அளித்து உயிர்ப்பிக்கிறார். "உயிரளித்த உபகாரியை யார்தாம் போற்றிப் புகழமாட்டார்கள்? ஆகவே நானும் எனக்கு இன்னுயிர் ஈந்த பிராணனைப் போற்றுகிறேன்; நீங்களும் போற்றி நன்றிமறவாதிருங்கள்" என்று இந்தச் சுலோகத்தாலே உபதேசிக்கிறார்கள், அந்த ஆஞ்ஜநேயரைப் போலவே, பரமசிவாம்சமாக அவதரித்து நம் அனைவருக்கும் உயிரளித்த பகவத்பாதர்கள்.

शम्बरवैरिशरातिगमम्बुजदलविपुललोचनोदारम् ।
कम्बुगलमनिलदिष्टं बिम्बज्वलितोष्ठमेकमवलम्बे ॥ ३ ॥

ஶம்பரவைரிஶராதிகம்
அம்புஜதல விபுல லோசனோதாரம் ।
கம்புகல மனிலதிஷ்டம்
பிம்பஜ்வலிதோஷ்டமேகமவலம்பே ॥ 3 ॥

ஶம்பரவைரிஶராதிகம் = சம்பராசுரனைப் பகைத்துக் கொன்றொழித்த பிரத்யும்னனுடைய ஸ்வரூபமான காமதேவனுடைய அம்புகளும் நெருங்கவொட்டாத உயர்நிலையிலே அமர்ந்தவரும் அம்புஜதலவிபுலலோசனோதாரம் = நன்னீரிலுள்ள தண்மையைக் காட்டுந் தாமரையிதழ்களைப்போல, அலர்ந்து பெரியனவாகி விரிந்த கண்களாலே தமக்குள்ள ஔதார்யத்தை விளக்குபவரும் கம்புகலம் = பகைவர்களை அச்சுறுத்துவதும் அடியார்களுக்கு அபயமளிப்பதுமான சங்கநாதத்தை எழுப்புவதற்கே போலும், அச்சங்கத்தையொத்த மிடற்றையுடையவரும் அநிலதிஷ்டம் = "வாயு பகவான் பெற்ற பாக்கியம்" என்று கொண்டாடப் பெற்றவரும் பிம்பஜ்வலிதோஷ்டம் = "ஸ்ரீராம, ராம, ராம" என்று மெல்ல உச்சரிக்கும்போது, கோவைக் கனிபோன்றவையாய்ச் செவ்வொளி பரப்பி மிளிர்கின்ற உதடுகளையுடையவரும் ஏகம் = தனிச்சிறப்புடையவருமான ஆஞ்ஜநேயஸ்வாமியை அவலம்பே = நான் பற்றுக்கோடாகக் கொள்கிறேன்.

பரமசிவனையும் ஒருசமயத்திலே வசப்படுத்திய காமபாணங்கள் ஆஞ்ஜநேயரை அணுகவும் இயலாதவை ஆயின; ஆயினும், பகைவரைச் சுட்டெரிக்கின்ற நெற்றிக்கண் இவரிடம் காணப்படவில்லை. 'தண் பெருநீர்த் தடந்தாமரை அலர்ந்தால் ஒக்குங் கண்பெருங் கண்ண'ராகவே விளங்கி, தம்முடைய

கடாக்ஷம் பெற்றவர்களுக்கு, “இன்பமே எந்நாளும் துன்பமில்லை” என்று தம்முடைய ஔதார்ய குணத்தை, ஸ்ரீராமபிரானைப்போலவே, தம்முடைய கண்களாலேயே விளக்குகிறார். “ஜயத்யதிபலோ ராம:” என்று அவர் முழுமிடறுகொண்டு கோஷிக்கும் போது, நல்லோர் அகமகிழ்வர்; தீயோர் பாஞ்சசன்னியத் தொனியைக் கேட்டவர்களை யொத்து மனம் வெதும்பி மாழ்குவர். செவ்வி பொருந்திய அவரது உதடுகள் ஸ்ரீராம நாமத்தையே என்றும் உச்சரிப்பனவாகி ஒளிபெற்றுக் காண்போர் மனத்தையும் கண்களையும் வசப்படுத்துகின்றன. இவ்வாறு, பரமனைப் பலவகையாலும் ஒத்தவராக விளங்குகின்றவர்கள் இவரைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகையால், வாயுபகவான் தவமிருந்து பரமனையே மகனாகப் பெற்றார்' என்றுகொண்டு, பரமனுடைய அவதாரங்களைப்போல் அல்லாமல், என்றும் சிரஞ்சீவியாகி ஸ்ரீராம நாமம் உச்சரிக்கப்படுகின்ற இடங்களில் எல்லாம் சென்று தரிசனமளித்துக் கைதூக்கி விடுகின்ற ஆஞ்ஜநேயரை, நானும் ராம நாமோச்சாரணஞ் செய்து லோக யாத்திரைக்கு ஊன்று கோலாகக் கொள்கிறேன்” என்று கூறி, “ஆர்த்தர்களின் ஆர்த்திகளையெல்லாம் போக்குகின்ற ஸ்ரீராமரது தூதரையே சரண்புகுவீர்களாக” என்று உலகோரை நல்வழிப் படுத்துகிறார்கள்.

“சீதாப்பிராட்டி, இராமபிரான், என்று சொன்ன இடமெல்லாம் ஆஞ்ஜநேயர் வருவரோ?” என்று ஐயுறவேண்டாம். அவ்விரு பெயர்களையும் யார் சொல்லக் கேட்டாலும், அவர்களுக்கு தீங்கிழைக்க முயன்ற இராவணன் பெயரைக் கேட்டாலுமே, அங்கே ஆஞ்ஜநேயர் ஓடிவந்துவிடுவார்” என்பதை நிரூபிப்பவர்கள்போல, அடுத்த சுலோகத்திலே, ஸ்ரீ ஆஞ்ஜநேயரின் ஸாந்நித்தியத்தை வேண்டி, அப் பெயர்கள் மூன்றையும் இட்டுப்பாடுகிறார்கள்.

दूरीकृतसीतार्तिः प्रकटीकृतरामवैभवस्फूर्तिः ।
दारितदशमुखकीर्तिः पुरतो मम भातु हनुमतो मूर्तिः ॥ ४ ॥

*தூரீக்ருதஸீதார்(த்)தி:*
*ப்ரகடீக்ருத ராமவைபவஸ்பூர்(த்)தி:*
*தாரித தசமுக கீர்(த்)தி:*
*புரதோ மம பாது ஹநுமதோ மூர்(த்)தி: ॥ 4 ॥*

தூரீக்ருதஸீதார்(த்)தி: = சீதாப்பிராட்டி இலங்கையிலே அசோகவனத்திலே இராவணனுற்பட்ட துன்பங்களையெல்லாம் விரட்டியோட்டியதும் ப்ரகடீக்ருதராமவைபவஸ்பூர்(த்)தி: = ஸ்ரீராமருடைய அருமை பெருமைகளின் அளவின்மையை எல்லோருக்கும் நன்கு விளக்குவதும் தாரிததசமுககீர்(த்)தி: = 'பத்துத் தலை ராவணன்' என்று புகழ்படைத்து, இவனைப் பார்த்தவர்கள் 'பரமசிவனோ, திருமாலோ, தேவேந்திரனோ?' என்று ஐயுறும்படியான மாட்சிமை பெற்று வீறுகொண்டு வாழ்ந்த அரக்கனுடைய புகழை துரும்பைக் கிள்ளியெறிவதுபோல, அனாயாசமாய் தேய்த்து மாய்த்ததுமான ஹனுமதோ மூர்(த்)தி: = ஆஞ்ஜநேயருடைய திவ்விய மங்கள வடிவமானது மம புரத: = என் முன்னாலே பாது = தேஜோமயமாய் விளங்குவதாக.

ஆஞ்ஜநேயருடைய வீரமும், அவர் பெற்ற வரமும், அவருடைய திடசித்தமும், பராக்கிரமமும் அவருடைய திருமுகத்திலேயுள்ள வடுவாலேயே நன்கு விளங்கும். தாய்ப்பாலைப் பருகும் பிள்ளைப் பருவத்திலேயே, செவ்வொளி பரப்பிய இளஞ்சூரியனைக் கண்டு, 'இதுவும் ஒரு பழமே!' என்று எட்டிப்பிடிக்கத் தாவினார். அப்பொழுது உதய திசைக்குப் பாலகனான தேவேந்திரன் சூரியபகவானுக்கு உதவியாக வந்து வச்சிராயுதத்தை ஆஞ்ஜநேயர்மீது வீசி

ஹன். ஆனால், அந்த வச்சிராயுதத்தாலும் அவருடைய சரீரத்திலே ஒரு சிறு வடுவைத் தான் செய்ய முடிந்தது. அந்த வடுவே அவருடைய வீரத்திற்கும் பராக்கிரமத்திற்கும் அறிகுறியாயிற்று. "உதய சூரியனுடைய செவ்வொளியானது நம்முடைய அறிவை ஊக்குவதாகவேண்டும்" என்னும் பிரும்மோபதேசத்தைப் பெறுவதற்கான பருவம் வருமுன்பே, ஆஞ்ஜநேயரின் நல்லறிவானது அச்செவ்வொளியாலே ஊக்கப்பெற்று, அவரைச் சூரியபகவானுக்குரிய சீடராக்கிற்று. சூரியபகவானை நோக்கிக்கொண்டே, அவருடைய தேருக்குமுன் பின்னோக்கி ஓடிக்கொண்டு, சகல சாஸ்திரங்களையும் ஓதி முடித்த பெருமை வேறு யாருக்கு உண்டு? இப்படி ஆஞ்ஜநேயருக்கு வசப்பட்ட அவருடைய வடிவமும் அபாரசக்தியுள்ளதாயிற்று. ஆஞ்ஜநேயருடைய பிரயத்தினம் ஏதுமின்றியே, அவருடைய வடிவத்தின் தோற்றமே சீதாப்பிராட்டியின் துன்பங்களையெல்லாம் தூறுகளிற் பாயச் செய்தது" என்பது வால்மீகி முனிவர் கண்ட உண்மை. ஆஞ்ஜநேயரின் உருவத்தைக் கண்ட பிராட்டி "இது கனவோ?" என்று ஐயுற்று, "இது கனவன்று; கனவிற் குரங்கைக் கண்டாற் கேடு வரும் என்பார்கள்; எனக்கோ உள்ளம் நிறைய ஆனந்தமன்றோ பெருகித் ததும்புகின்றது? ஆகையால் இது நனவுதான்" என்று நிச்சயிக்கிறாள். ஆண் வடிவு கொண்டுள்ள எவரோடுஞ் பேசக் கூசுகின்ற சீதாதேவியே, ஸ்ரீராமபிரானுடைய பெருமைகளைக் கூறிப் பெற்ற பேரின்பத்தாலே மயிர்க்கூச்செறிந்த ஆஞ்ஜநேயருடைய வடிவத்தைக் கண்டதும், "இவன் வினவுதற்குரியன்" என்று பேசத் துணிந்தாள் என்றால், ஸ்ரீ ராமருடைய வைபவத்தை ஆஞ்ஜநேயருடைய ஆனந்த வடிவமே நன்கு விளக்குவதாயிற்று என்பது வெளிப்படையன்றோ? இவைபோலவே, இராவணனுடைய கொலு மண்டபத்திலே அவனுக்குச் சரி சமானமாகத் தம்முடைய வாலையே சிங்காதனமாக

அமைத்துக்கொண்டு வீற்றிருந்த அவ்வடிவமே, ' தச முகனுர் ' என்று பத்துத் திக்குகளிலும் பரந்திருந்த இராவணனுடைய புகழை எல்லாம் தேய்த்து மாய்க்கவல்லதாயிற்று. " இவ்வாறு வித்யையும் விநயத்தையும் வீரத்தையும் விளக்குகின்ற வடிவத்தை யுடைய ஆஞ்ஜநேயர் அவ்வடிவத்தை என்முன்னும் காண்பித்து, அக்காட்சியாலேயே என்னுடைய ஆர்த்திகளையெல்லாம் போக்கி, எனக்கும் ஸ்ரீராமருடைய பெருமைகளை நன்கு விளங்கச் செய்து, தசமுகனைக் காட்டிலும் கொடியவையாய் என்னை இமிசிக்கின்ற பாபங்களையெல்லாம் பொசுக்கியெரித்து, என்னையும் தம்மைப்போல ராமபக்தனுக்குவாராக" என்று பிரார்த்தித்து, "நானும் அந்த ராமசந்திரமூர்த்தியின் திருவருளுக்குப் பாத்திரனுகக்கடவேன்" என்கிருர்கள் நமக்கு வழிகாட்டவந்த பரமாசார்யர்கள்.

---

वानरनिकराध्यक्षं दानवकुलकुमुदरविकरसदृक्षम् ।
दीनजनावनदीक्षं पवनतपः पाकपुञ्जमद्राक्षम् ॥ ५ ॥

வானரநிகராத்யக்ஷம்
தானவகுலகுமுதரவிகரஸத்ருக்ஷம் ।
தீனஜனுவனதீக்ஷம்
பவனதப: பாகபுஞ்ஜமத்ராக்ஷம் ॥ 5 ॥

வானரநிகராத்யக்ஷம் = " வானரர்களுக்கு அதிபதி வாலியுமல்லன், சுக்ரீவனுமல்லன், ஸ்ரீ ராமருடைய திருவடியாக விளங்கும் ஆஞ்ஜநேயரே " என்று மானிடரும் வானவரும் கொள்ளும்படியாகவும், வானர குலத்தை ஆஞ்ஜநேயர்குலமென்று புகழும்படியாகவும் வானரக் கூட்டங்களுக்கு என்றும் தலைவராக விளங்குகின்றவரும் தானவகுலகுமுதரவிகரஸத்ருக்ஷம் = நிசிசரர்

களான அரக்கர்களின் வர்க்கத்தினர் அனைவரும் இரவிலே பூக்கின்ற குமுத மலர்களை யொத்தவர்கள் ஆகையால், அப் பூக்களுக்கு சூரிய கிரணம் எப்படி வாட்டத்தைக் கொடுத்து அவற்றை அழித்துவிடுமோ அவ்வாறு, சூரிய குலத்திலே தோன்றிய ஸ்ரீ ராம ருடைய வலகைபோன்றுதவி, அரக்கர்களை வாட்டி அழிக்கின்றவரும் தீனஜனவனதீக்ஷம் = அரக்கர்களைப் போன்ற கொடியோர்களாலே வருத்தமுறுகின்ற வர்களைப் போலவே முன்செய்த தங்கள் தீவினைப் பயனாலே வருந்துகின்றவர்களனைவரையும் காப்பாற்று வதையே விரதமாகக் கொண்டு நலிந்தோர்க்கு நன்மையளிக்கின்றவருமாய் பவனதப: பாகபுஞ்ஜம் = தூய்மை மிகுந்தவராகையாலே, "நீயே கண்கண்ட தெய்வம்" என்று வேதமோதுவோராலே புகழப் பெற்ற வாயு பகவானுடைய தவத்தின் பயனே இவ்வுருக் கொண்டதோ என்று வியக்கும்படியான தூயவடிவங் கொண்ட ஆஞ்ஜநேய ஸ்வாமியை அத்ராக்ஷம் = (அவரைக் காணவேண்டு மென்று பிராத்தித்த வுடனேயே) கண்ணாரக் கண்டு கொண்டேன்.

மாருதியின் திருவுருவத்தை மனத்திலேகொண்டு வாயாரத் துதிசெய்து, அவரையே தஞ்சமாகப் பெற விரும்பி, "நினைத்தவுடன் காட்சியளிக்கும் வள்ளலே! என்முன் தோன்றியருளி, பிராட்டியின் துன்பங் களைத் துடைத்ததுபோல, என் துயரங்களையும் போக்கியருளி, ஸ்ரீராமருடைய திருப்புகழை மந்த மதி யாகிய எனக்கும் விளக்கிக்காட்டி, என்னையும் அவ ருக்கே ஆட்படுத்தி, என் சங்கடங்களையும் தீர்த்தருள வேண்டும்" என்றேன்; உடனே அவர், வானர சேனையைக்கொண்டு அரக்கர்களை அழித்து அவ்வரக் கர்களாலே நலிவுற்ற சாதுக்களைக் காத்தருளியது போலவே, என்னையும் காத்தருளினார் என்று ஐந்து சுலோகங்களாலே ஆதிசங்கராசார்யர்கள் இரத்தினச்

சுருக்கமாகக்கூறி, "இச்சிறு மணிமாலையைக்கொண்டு எவரும் நற்கதி பெறலாம்" என்று பிரகடனஞ் செய்கிறார்கள். "இம்மையின்பங்களை நுகர விரும்புவோர்களுக்கும் இம்மாலை பயன்தருவதாகும்" என்று பலச்ருதியிலே வற்புறுத்துகிறார்கள்.

---

एतत्पवनसुतस्य स्तोत्रं यः पठति पञ्चरत्नाख्यम् ।
चिरमिह निखिलान्भोगान् भुङ्क्त्वा श्रीरामभक्तिभाग्भवति ॥ ६ ॥

ஏதத்பவனஸூதஸ்ய
ஸ்தோத்ரம் ய: படதி பஞ்சரத்னாக்யம் ।
சிரமிஹ நிகிலான் போகான்
புங்க்த்வா ஸ்ரீராம பக்திபாக்பவதி ॥ 6 ॥

பவனஸூதஸ்ய = வாயுகுமாரரான ஆஞ்ஜநேயருடைய ஏதத் பஞ்சரத்னாக்யம் ஸ்தோத்ரம் = "பஞ்சரத்னம்" என்னும் இத்துதியை ய: படதி = எவன் உச்சரிக்கிறானோ அவன் இஹ = இவ்வுலகிலே சிரம் = நீண்டகாலம் நிகிலான் போகான் = எல்லாவகை இன்பங்களையும் புங்க்த்வா = அனுபவித்து ஸ்ரீராமபக்தி பாக்பவதி = "இவ்வின்பமெல்லாம் ஸ்ரீராமருடைய பிரஸாதமடியாக வருவது" என்றுணர்ந்து அந்த இராமபிரானிடம் பக்தியுடையவனாகிச் சிறந்து விளங்குகிறான்.

ஸ்ரீராமருடைய திருவருளுக்குப் பாத்திரமாவதற்குரிய வழி ஒன்றே. அவரை நேரிலே சென்று தரிசனஞ் செய்வது எல்லோர்க்கும் சாத்தியமாகாது. "குரங்கிற்குரியவையான இந்திரிய சாபல்யத்தையும் சலிக்கின்ற புத்தியையுமுடைய சுக்ரீவனுக்கும் அவருடைய அருள் கிட்டியதென்றால், அது ஆஞ்ஜநேயருடைய அனுக்கிரகமேயாகும்" என்று உணர்ந்து

அவரைமுன்னிட்டுக்கொண்டு ஸ்ரீராமரிடஞ்சென்றால், அந்த ஆஞ்ஜநேயர் "இவன் மிகச் சபலபுத்தியுடையவன், மெய்தான்; இவனுக்கு உலகப்பற்றுவிடவில்லை. ஆயினும் தங்களைச் சரண்புகுகின்றான்; ஆகையால் இவன் வேண்டுகின்ற இம்மையின்பங்களை யெல்லாம் பரிபூரணமாக அளித்து, அவற்றை அவன் அனுபவிக்கும்போது சுக்கிரீவ மகாராஜாவைப்போலத் தங்களை மறந்திருந்தாலும், எனக்காகவேனும் அவன் செய்த அபசாரங்களைப் பொருட்படுத்தாமல், அவனையும் ஆட்கொண்டு திருத்திப் பணிகொள்ளவேண்டும்" என்று வேண்டுவார். அவர் வேண்டியவற்றையெல்லாம் அளிக்கக் காத்திருக்கும் ஸ்ரீராமரும் நம்மையும் தமது அடியார்களின் திருக்கூட்டத்திலே சேர்த்துக் கொள்வார். "புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்த பிரானார், நமக்கும் இம்மையுஞ் சாதித்து வானவர் நாட்டையும் கண்டுகொள்ளுங்கள் என்று வீடும் தருவதற்கு விரைவார்" என்று ஸ்ரீராமருடைய வைபவங்களையும் ஆஞ்ஜநேயரைத் துதிக்குமுகமாகவே விளக்குகிறார்கள் ஸ்ரீ பரமாசார்யர்கள்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதேப்யோ நம:

ஸ்ரீ ஆஞ்ஜநேயஸ்[illegible]

ஸ்ரீ ராமசந்த்ர பரப்[illegible]

ஓம் தத் [illegible]

6933